**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி**

**முன்னிலை: திருமதி.V.சிவகாமசுந்தரி, பி.ஏ.,பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, அறந்தாங்கி.**

2025 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 21-ம் நாள் சனிக்கிழமை

**IA No.02/2025**

**In**

**O.S No.228/2001**

1) தனலெட்சுமி (இறந்தார்), .....**மனுதாரர்/வாதி**

2) வெங்கிடுசாமி,

3) ஹேமலதா,

4) பழனியப்பன்,

5) மாலா,

6) லெட்சுமணன், .....**மனுதாரர்கள்/உத்தேச 2 முதல் 6 வாதிகள்**

**//எதிர்//**

1) இராஜசேகரன்,

2) சுந்தர்ராசு,

3) கருப்பையா,

4) காதர் முகைதீன்,

5) பீர் முகமது,

6) ரெங்கநாதன், .......**எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்**

இந்த மனுவானது இந்த நீதிமன்றத்தில் என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.M.சண்முகசுந்தரம்.,B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், 2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.குழந்தைவேலு.,B..A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், 3ம் எதிர்மனுதாரர்/3ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.ஸ்ரீதரன்.,B.Sc.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், 5ம் எதிர்மனுதாரர்/5ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.பத்மநாமன்.,B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும்,

இந்த மனு சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களும் இந்த நீதிமன்றத்தினால் நன்கு கவனமாக பரிசீலனை செய்யப்பட்டும், இந்நாள் வரையில் என் சீரான பரிசீலனையில் இருந்து, இன்று இந்த நீதிமன்றம் வழங்கும்.

## உத்தரவு

இந்த மனுவானது மனுதாரர் தரப்பில் கட்டளை 22 விதி 09-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்:-**

இந்த வழக்கு நிலுவையில் உள்ளபோது வாதி கடந்த 27.03.2023 அன்று இறந்துவிட்டார். இறந்துபோன வாதிக்கு 90 நாட்களுக்குள் வாரிசு சேர்த்திருக்க வேண்டும். அந்த விபரம் மனுதாரருக்கு தெரியாததாலும் வழக்கு நடவடிக்கையை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தாலும் இவ்வழக்கு 2 முதல் 6 உத்தேச வாதிகளுக்கு எதிராக அபேட் ஆகிவிட்டது. அபேட் ஆன வழக்கை ரத்து செய்து உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. 2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் :-**

மனுதாரர்களின் இந்த மனு சுத்தப் பொய்யும் பிரட்டும் மோசடியுமானது ஆகும். மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்ய ஏற்பட்ட காலதாமதத்திற்கு உரிய காரணத்தினை இந்நீதிமன்றத்திற்கு தெரிவிக்கவில்லை என்றும், வழக்கை இழுத்தடிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதாக கட்சி செய்யப்பட்டுள்ளது.

**3. தற்போது இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய முக்கிய சங்கதி யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா இல்லையா? என்பதாகும்.**

இந்த மனுவானது மனுதாரர்/வாதியால் இறந்துபோன வாதிக்கு 90 நாட்களுக்குள் வாரிசு சேர்க்காமல் 2 முதல் 6 உத்தேச வாதிகளுக்கு எதிராக அபேட் ஆகியுள்ள வழக்கை ரத்து செய்து உத்தரவிட வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்த எதிருரையில் காலதாமதத்திற்குரிய காரணம் தெரிவிக்கப்படவில்லை என்று கட்சி செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் ஏற்கனவே இறந்துபோன 1ம் வாதிக்கு வாரிசு சேர்ப்பதில் ஏற்பட்ட 591 நாள் காலதாமதம் வழக்கிடை மனு எண். 01/2025 படி மன்னித்து ஏற்கப்பட்டுள்ளது. இந்த வழக்கு மாண்புமிகு புதுக்கோட்டை மாவட்டமுதன்மை நீதிபதி அவர்களின் உத்தரவுப்படி

வழக்கு நிறுத்திவைக்கப்பட்டிருந்ததால் Kept in abeyance மனுதாரரால் சொல்லப்பட்டுள்ள காரணம் ஏற்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

முடிவாக செலவுத்தொகையின்றி இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு பின் அவரால் நேரடியாக கணினி சாதனத்தில் பதிவு செய்யப்பட்டு பின் என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2025-ம் ஆண்டு ஜூன் மாதம் 21-ம் நாள் என்னால் கையொப்பம் செய்யப்பட்டு இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**ஒம்/V.சிவகாமசுந்தரி**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அறந்தாங்கி.**

**<u>சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் பட்டியல்:-</u>**

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி</u>** :- இல்லை

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>**: இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி</u>**:- இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u>** : இல்லை

**//உண்மை நகல்//**

SIVAGAMASUNDARY V
Digitally signed by SIVAGAMASUNDARY V
Date: 2025.06.21 15:57:51 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அறந்தாங்கி.**

**வரைவு/செவ்வை உத்தரவு**
I.A.No.02/2025
O.S.No.228/2001
**நாள்.21.06.2025**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**அறந்தாங்கி.**